FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)
(பா.கு.பா.ச பிரிவு 173 இன் கீழ்)

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109788

1. District : மாவட்டம் Virudhunagar PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 04/2025 Date: நாள் 05.05.2025

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: u/s 7

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 17.04.2025 at
Date to : நாள் வரை 11.30 hrs
28.04.2025 at 13.15 hrs
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.05.2025
Time : நேரம் 15.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 05.05.2025
Time : நேரம் 15.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 5 Kms / North

Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.ஆரோக்கியசாமி
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.அருளானந்து

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 09.09.1954
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் மீன்பிடி தொழில்
(g) Address : முகவரி க.எண்.4/5, எட்டிச் சேரி, எஸ்.பி.பட்டினம் அஞ்சல், திருவாடனைத் தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு.முருகன், கூட்டுறவு சார்பதிவாளர், விருதுநகர் வட்ட கூட்டுறவு வீட்டுவசதி சங்கம், விருதுநகர்.

2) திரு.மோகன், அலுவலக பணியாளர், கூட்டுறவு சார்பதிவாளர் அலுவலகம், விருதுநகர் வட்ட கூட்டுறவு வீட்டுவசதி சங்கம், விருதுநகர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
- வாதியால் தாமதம் -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Not arise

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் இன்று 05.05.2025 பிற்பகல் 15.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனைத் தாலுகா, எஸ்.பி.பட்டினம் அஞ்சல், எட்டிச் சேரி, கதவு எண்.4/5-இல் வசிக்கும் திரு.அருளானந்து என்பவரின் மகன் திரு.ஆரோக்கியசாமி என்பவர் என் முன்பாக ஆஜராகி விபரம் சொல்லி கொடுத்த புகார் மனுவை பெற்று அதை படித்துப்பார்த்து, மேலும் அவரிடம் விபரம் கேட்டு தெரிந்து கொண்டேன். உடன் அந்த புகார் தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், எதிரிகள் மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 05.05.2025 இரவு 19.00 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரிகள் மீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.04/2025 /தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A. Arockiasamy

05.05.25

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

(K. RAMACHANDRAN)
ADSP/V&AC/VNR (HQ)

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண் .....

விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.04/2025 பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

சட்டப் பிரிவு 7 of the Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன்படி வழக்குப்பதிவு செய்தேன். வாதி திரு.ஆரோக்கியசாமி அவர்களது புகார் மனு விபரம் பின்வருமாறு :- அனுப்புநர் :- அ.ஆரோக்கியசாமி, 71/25, த/பெ.அருளானந்து, கதவு எண்.4/5, எட்டிச் சேரி, எஸ்.பி.பட்டினம் அஞ்சல், திருவாடனைத் தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம். பெறுநர் :- உயர்திரு.கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, விருதுநகர். அய்யா, நான் இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை தாலுகா, புல்லக்கடம்பன் பஞ்சாயத்து, எட்டிசேரி கிராமத்தில் மனைவி, மகனுடன் குடியிருந்து வருகிறேன். நான் மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். கடந்த 1982ஆம் வருடம், நானும், எனது மனைவி திருமதி.ரத்தினமேரியும், தேவகோட்டை தெற்கு கோட்ட அளவிலான கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட்டிடம் வீடு கட்டுவதற்காக ரூபாய் 3000/- அடமான கடனாக பெற்று, அதற்கு என்னுடைய பெயரில் எட்டிசேரி கிராமத்திலிருந்து சர்வே எண்.154/6-இல் கண்ட 9 செண்ட் இடத்தை தொண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் அடமான பத்திரமாக பதிவு செய்து கொடுத்தேன். என்னைப் போல், எங்கள் ஊரைச்சேர்ந்த திரு.அழகன் மகன் திரு.கருப்பையா உட்பட 11 பேர் மேற்படி சங்க லிமிடெட்டில் வீடு கட்டுவதற்காக தலா ரூ.3000/- அடமானம் கடனாக பெற்று, அதற்கு அவரவர் பெயரில் இருந்த சொத்தை தொண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் அடமான பத்திரமாக பதிவு செய்து கொடுத்தார்கள். அவ்வாறு நாங்கள் பெற்ற கடன் தொகையில் அவரவர் இடத்தில் ஓட்டு வீட்டை கட்டினோம். இந்நிலையில் மேற்படி சங்கத்தில் பெற்ற கடன் தொகை அரசால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாக கேள்விப்பட்டு, மேற்படி சங்கத்திற்கு எழுதிக்கொடுத்த அடமான பத்திரத்தை ரத்து செய்வதற்காக, நானும், என்னைப்போல் கடன் பெற்ற எங்கள் ஊரைச் சேர்ந்த திரு.அழகன் மகன் திரு.கருப்பையா என்பவரும், அதற்குரிய அடமான பத்திர நகல் மற்றும் வில்லங்க சான்று ஆகியவற்றுடன் தேவகோட்டையில் உள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு சென்று விசாரித்தோம். இறுதியில் விருதுநகர், புல்லாலக்கோட்டை ரோடு, வேலுமீனா நகரில் உள்ள விருதுநகர் வட்ட கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தில் தான் உள்ளது என்று கேள்விப்பட்டு, அதற்குரிய அடமான பத்திர நகல் மற்றும் வில்லங்க சான்று ஆகியவற்றுடன் கடந்த 17.04.2025 அன்று காலை சுமார் 11.30 மணியளவில் சென்று, அங்கிருந்த கூட்டுறவு சார்பதிவாளர் திரு.முருகன் அவர்களிடம் கொடுத்து விசாரித்தோம். அப்போது அவர், நாங்கள் கொண்டு சென்ற அடமான பத்திர நகல் மற்றும் வில்லங்க சான்று ஆகியவற்றை வாங்கி பார்த்துவிட்டு, அவற்றை அருகிலிருந்த அலுவலக பணியாளர் திரு.மோகன் என்பவரிடம் கொடுத்தார். பின்னர் எங்களிடம், உங்களுடைய அடமான பத்திரம் ரத்து செய்வதற்கு உரிய ஆவணங்கள் இங்குதான் உள்ளது, என்னால்தான் உங்களுடைய அடமான பத்திரத்தை ரத்து செய்ய முடியும், அதற்கு தங்களுடைய குடும்ப

உறுப்பினர்களின் ஆதார் கார்டு நகல்களை கொடுக்கவேண்டும், அவற்றை அலுவலக பணியாளர் திரு.மோகனிடம் கொடுங்க, அவ்வாறு திரு.மோகனிடம் ஆதார் கார்டு நகல்களை கொடுக்கும்போது தலா ரூ.6,000/- சேர்த்து கொடுங்க என்றும், அருகிலிருந்த அலுவலக பணியாளர் திரு.மோகனிடமும், எங்களிடமிருந்து குடும்ப உறுப்பினர்களின் ஆதார் கார்டு நகல்களையும், எங்களிடம் அவர் கேட்ட தலா ரூ.6,000/- பணத்தையும் வாங்கி வைக்குமாறு கூறினார். அதற்கு நாங்கள், நாங்க மீன்பிடி தொழில்தான் செஞ்சு வாரோம், இந்த ஆபிஸ கண்டுபிடிச்சு வரவே ரொம்ப சிரமப்பட்டுட்டோம், இப்ப நீங்க வேற இவ்வளவு ரூபாய் கேக்குறீங்க, இவ்வளவு பணம் எங்களால கொடுக்க முடியாது சார் என்று சொன்னோம். அதற்கு அவர், சரி சரி தலா ரூ.5000/- பணத்தையாவது ரெடி பண்ணி கொண்டுவந்து அலுவலக பணியாளர் திரு.மோகனிடம் கொடுங்க என்று சொல்லிவிட்டு, அருகிலிருந்த அலுவலக பணியாளர் திரு.மோகனிடமும், எங்களிடமிருந்த குடும்ப உறுப்பினர்களின் ஆதார் கார்டு நகல்களையும், எங்களிடம் அவர் கேட்ட தலா ரூ.5000/- பணத்தையும் வாங்கி வைக்குமாறும் கூறினார். அப்போது மேற்படி அலுவலக பணியாளர் திரு.மோகன் எங்களிடம், C.S.R சார் சொல்ற மாதிரி, அவர் கேட்ட தலா ரூ.5000/- பணத்தோடு வாங்க, உங்க வேலை சீக்கிரம் முடிய நான் உதவி செய்கிறேன் என்று சொன்னார். நாங்களும் குடும்ப உறுப்பினர்களின் ஆதார் கார்டு நகல்களை எடுத்துக்கொண்டு வருகிறோம் என்று கூறிவிட்டு வந்துவிட்டோம். பின்னர், நானும், எங்கள் ஊரைச்சேர்ந்த திரு.கருப்பையாவும் கடந்த 28.04.2025ஆம் தேதி மதியம் சுமார் 01.15 மணியளவில் விருதுநகர், புல்லலக்கோட்டை ரோடு, வேலுமீனா நகரிலுள்ள விருதுநகர் வட்ட கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் அலுவலகத்திற்கு சென்றபோது, அங்கு அலுவலக பணியாளர் திரு.மோகன் மட்டும் இருந்தார். அவரிடம் கூட்டுறவு சார்பதிவாளர் திரு.முருகன் சாரை பற்றியும், அடமான பத்திரம் ரத்து செய்வது பற்றியும் கேட்டபோது, அதற்கு அவர், சார் அலுவலக வேலையாக தேவகோட்டை சென்றிருப்பதாகவும், சார்தான், அவர் உங்ககிட்ட கேட்ட தலா ரூ.5000/- பணத்தையும், குடும்ப உறுப்பினர்களின் ஆதார் கார்டு நகல்களையும், எங்கிட்ட கொடுக்க சொல்லிவிட்டாருல்ல, எங்க கொண்டுவந்திருக்கீங்களா என்று கேட்டார். அப்போது நாங்கள் அவரிடம், தலா ரூ.5000/- பணத்தை எங்களால புறட்ட முடியல சார், குடும்ப உறுப்பினர்களின் ஆதார் கார்டு நகல்களை மட்டும் கொண்டு வந்திருக்கோம் சார் என்று கூறி, ஆதார் கார்டு நகல்களை மட்டும் அவரிடம் கொடுத்தோம். அவற்றை அவர் பெற்றுக்கொண்டு, ஆதார் கார்டு நகலில் அவரவரின் பெயரையும், போன் நம்பரையும் எழுதச் சொன்னார். பின்னர், அவர் எங்களிடம், CSR சார் கேட்ட தலா ரூ.5000/- பணத்தை கொண்டு வந்து என்னிடம் கொடுத்தால்தான், உங்களுடைய அடமான பத்திரத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுப்பார் என்றும், இல்லையென்றால் உங்களது வேலை நடக்காது என்றும் கூறி அனுப்பிவைத்தார். நாங்களும் வேறு வழியில்லாமல் சரியென்று சொல்லிவிட்டு எங்களது சொந்த ஊரான எட்டிச் சேரிக்கு சென்றுவிட்டோம். நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த திரு.அழகர் மகன்

திரு.கருப்பையாவும் கலந்து பேசி முடிவெடுத்து, லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாமல் கூட்டுறவு சார்பதிவாளர் திரு.முருகன் அவர்கள் கேட்ட தலா ரூ.5000/- பணத்தில், எனக்குரிய ரூ.5000/- பணத்தை மட்டும்தான் என்னால் நேற்று ரெடி பண்ண முடிந்தது. எனவே என்னிடம் லஞ்சம் கேட்ட மேற்படி திரு.முருகன், கூட்டுறவு சார்பதிவாளர் மற்றும் அவரது அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலக பணியாளர் திரு.மோகன் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (sd) Tr.A.Arokiasamy (05.05.2025) Sir, Received the complaint on 05.05.2025 at 15.00 hrs. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Viruthunagar V&AC Cr.No.04/2025 u/s 7 of PC Act 1988 as amended in 2018 on 05.05.2025 at 19.00 hrs and took up for investigation. (Sd) (K.Ramachandran) 05.05.25 ADSP/V&AC/VNR(OD).

The original FIR along with original complaint is submitted to the court of the CJM cum Special Judge for P.C. Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers.

05.05.25

(K.RAMACHANDRAN)
ADSP/V&AC/VNR(OD).